1970 செப்டம்பர் 1]

கோவை மாவட்டத்தில் நீரூற்றுகள்

* 170 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர், தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தாஞகப் பீரிடும் நீர் ஊற்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் தமது பதிலில் 'இல்லை' என்று பதில் சொன்னுர்கள். இனிமேலாவது அதற்கான முயற்சி எடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஏற்கனவே, தென் ஆற்காடு, திருச்சி, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் எளிதில் நீர் ஊற்றுக்கள் கிடைக்கும் இடங்களில் கூட போடப்பட்ட கிணறுகள் வெற்றிகரமாக நடைபெறவில்லை. சமீபத்தில் கூட வரட்சி நிவாரண நிதியிலிருந்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழித்து அவைகளை ரிப்பேர் செய்தும் மீண்டும் ஆழப்படுத்தியும் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, கோவையில் இருக்கிற நீரூற்றுகளை எடுக்கும் திட்டம் தற்சமயம் இல்லை.

Russian tractors

* 171 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether a number of Russian tractors have been procured by the Tamil Nadu Government; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம்.

டிராக்டர் வாடகைத் திட்டத்தின் கீழ் வாடகைக்கு விட தற்போது வேளாண்மைத் துறையிடம் 45 ரஷ்ய நாட்டுப் பல் சக்கர டிராக்டர்களும், சக்கர வகை டிராக்டர்கள் இரண்டும் உள்ளன.

இவை தவிர, தமிழ் நாடு வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் வழங்கப்படுவதற்காக அரசு வாணிபக் கழகம் 350 ரஷ்ய நாட்டு டிராக்டர்களை ஒதுக்கியுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த ரஷ்ய டிராக்டர்களின் விலை என்ன? மேலும், அரசு இந்த வருடத்தில் இந்த ரஷ்யன் டிராக்டர்களை வாங்க இருக்கிறதா? அப்படி வாங்கப்படும் டிராக்டர்களை தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் வழங்குகிறதா அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் வழங்கும் எண்ணம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணியமுத்து: இந்த டிராக்டர்களின் விலை பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. ஆனால் விவசாயிகளுக்கு இவைகள் வாடகைக்கு கொடுக்கப்படுகின்றன. பஞ்சாயத்துக்கள் மூலம் வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ரஷ்ய டிராக்டர்கள் என்று சொல்லப்படுகிறது. சிலயிடங்களில் டிராக்டர்களுக்கு எதிர்ப்பு இருக்கிறது. ஆனால் இவை ரஷ்யாவிலிருந்து செய்யப்பட்டு வருகின்றனவென்றாலும் ரஷ்யக் கொள்கையைச் சார்ந்தவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கமாட்டார்கள் என்று சர்க்காருக்குத் தெரியுமா?

(பதில் இல்லை)

திரு. கொளத்தூர் கோதண்டம்: ரஷ்ய டிராக்டர்கள் ஓ.டீ. 16 குதிரை ஓட்டம், 20 குதிரை ஓட்டம், 45 குதிரை ஓட்டம் என்று மூன்று பிரிவுகளாக இருக்கின்றன. குறிப்பாக சிறிய விவசாயிகளுக்கு இந்த 16 ஹார்ஸ் பவர் டிராக்டர்கள்தான் அதிகமாகத் தேவைப்படுவதால் அவற்றை இன்னும் அதிகமாக வரவழைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இதுவரையில் 14 ஹார்ஸ் பவர் கொண்ட ரஷ்யன் டிராக்டர்கள்தான் 343 வரப் பெற்றிருக்கிறது. இன்னும் இந்த நடப்பாண்டில் 50 ஹார்ஸ் பவர் கொண்ட 250 டிராக்டர்கள் வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி: நமது அரசாங்கத்தின் வேண்டுகோள்படி அன்னிய நாடுகளில் இருக்கிறவர்கள் அவர்களின் சொந்தக்காரர்களுக்கு நேரடியாக டிராக்டர்களை அங்கிருந்து குறைந்த விலையில் வாங்கி அனுப்பலாம் என்ற அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா? அத்தகையவர்களுக்கு அரசாங்கம் முன் பணம் கொடுத்து உதவி செய்ய முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அன்னிய நாடுகளிலிருந்து வரக்கூடிய டிராக்டர்களுக்கு மத்திய அரசுதான் முதலில் அனுமதி தரவேண்டும். அவற்றில் சிலவற்றை 'கிஃப்டாக' பெற்றுக் கொள்கிறார்கள். அதற்கு மத்திய அரசு அனுமதி தர வேண்டும். பொது நிலையங்களுக்கு டிராக்டர்கள் வாங்கப்பட்டு பல பணிகள் செய்யப்படுகின்றன. நம் அரசாங்கம் அவர்களுக்கு நற்சாட்சிச் சான்றுகள் கொடுத்தால் அதன் மூலம் கூட டிராக்டர்கள் வர வழியிருக்கிறது.

திரு. கே. விநயகம்: ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற இந்த டிராக்டர்கள் ரஷ்ய கான்ஸலேட் மூலம் நம் விவசாயிகளுக்குத் தரப்படுகிறதா? அல்லது நம் சர்க்காரால் சிபார்சு செய்யப்பட்டதன் விளைவாக அதன் மூலம் நாம் பொறுக்கியெடுக்கும் விவசாயிகளுக்கு தரவேண்டுமென்று சொன்னால் அப்படித் தரப்

1970 செப்டம்பர் 1]

படுகிறதா? இதுவரையில் இந்த டிராக்டர்களை பயன் படுத்தக் கூடாது என்று விவசாயிகள் கிளர்ச்சி செய்தார்கள். அப்படி இந்த ரஷ்ய டிராக்டர்களுக்கும் கிளர்ச்சி செய்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்போது ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலம் கொடுக்கப்பட்டு அவர்கள் விநியோகிக்கிறார்கள். அவற்றை எந்தெந்த இடங்களில், எந்தெந்த வகையில், யார் யாருக்கு எந்த எந்த அடிப்படையில் கொடுக்கலாம் என்று அந்தக் கழகமே பரிசீலனை செய்து கொடுத்துக் கொண்டு வருகிறது. டிராக்டர்களை ஆரம்பத்தில் குடியானவர்கள் எதிர்த்து இருந்தாலும் இப்போது அதிகமாக வேண்டுமென்றுதான் கேட்டு வருகிறார்கள். எந்தவிதமான நவீன சாதனங்களுக்கும் ஆரம்பத்தில் எதிர்ப்பு இருப்பது சகஜம்தான். ஆனால் இப்போது அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டு அவர்கள் அதிகமாக டிராக்டர்களைக் கேட்கிறார்கள். கொடுப்பதற்குத்தான் இன்று அரசாங்கத்தாலும் முடியவில்லை, அந்தக் கழகத்தினராலும் முடியவில்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: ஏற்கனவே நான் ஒரு கேள்வி போட்டேன். ஆனால் அதற்கு பதில் சொல்லவில்லை. இந்த டிராக்டர்கள் ரஷ்யாவிலிருந்து வருவதால் அந்தக் கொள்கையைச் சார்ந்தவர்கள், அவர்களின் அனுதாபிகள், வலதுசாரி கம்யூனிஸ்ட்கள் இந்த டிராக்டர்கள் வருவதை எதிர்க்கிறார்களா? ஆதரிக்கிறார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இந்தக் கேள்வியை ஒட்டி வராது.

திரு. பி. ஜி. கருத்திருமன்: டிராக்டர்கள் வேண்டாமென்று அவர்கள் சொல்கிறார்களா? மந்திரி பதில் சொன்னாலும் நீங்கள் விடமாட்டீர்கள் போலிருக்கிறதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் கூட்டுமுறையில் இதுவரை எவ்வளவு டிராக்டர்கள் வழங்கியுள்ளது? அரசாங்கம் எவ்வளவு வழங்கியுள்ளது? தனி நபர்களுக்கும் எவ்வளவு டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தற்போது குறிப்பு இல்லை, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. சோ. கருணைநாதன்: ரஷ்யாவிலிருந்து டிராக்டர்கள் வரவழைத்து வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் இந்தியாவிலேயே தயாரிக்கப்படுகிற டிராக்டர்களை வாங்கி வழங்கியிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதிகப்படியான டிராக்டர்கள் நம்முடைய நாட்டு டிராக்டர்கள்தான் தரப்பட்டுவருகின்றன.